(இ). பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 211-வது விதியின் கீழ், 1990–91 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஈ). உரிமைக்குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 227-வது விதியின் கீழ், 1990-91 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public undertakings) உரிமைக் குழு (Committee on Privileges) ஆகிய

வற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1990 ஆம் ஆண்டு மே திங்கள் 2-ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாளைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1990 ஆம் ஆண்டு மே திங்கள் 3-ஆம் நாள், வியாழக்கிழமை, பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1990 ஆம் ஆண்டு மே திங்கள் 4-ஆம் நாள் வெள்ளிக்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

8. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,68,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கூலிகளுக்கு குடியிருக்க இடமும் விவசாயம் செய்ய நிலமும் பினாமி நிலத்தைப் பிரித்து வழங்குவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29,68,77,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".